**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No.157 /2019 PW 3.**

பெயர் : பாண்டியன் தந்தை/கணவர் பெயர்: தியாகராஜன்

ஊர் : தாலுகா :

வயது : தொழில் :

ஜாதி : சமயம் : இந்து

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2025

---

**(2,5 எதிரி ஆஜர். 1,3 மற்றும் 4 எதிரிகள் ஆஜரில்லை. 1,3 மற்றும் 4 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**13.11.2025 முதல் விசாரணை தொடர்ச்சி:**

**1.** இந்நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தப்பட்டுள்ள நான்கு உருட்டு கட்டைகளில் எந்த உருட்டுக் கட்டையை 3ம் எதிரி பயன்படுத்தினார் என்றால் நான்கில் ஒன்று சிறிய கட்டையை சாட்சி அடையாளம் காட்டுகிறார். **(அந்த கட்டை அ.சா.பொ. –1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** காயம் ஏற்பட்டவுடன் சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தேன். பின்னர் அங்கியிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சென்று அங்கு இரண்டு நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

2. இந்நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட சான்றுபொருள் கம்பு ஆகும். கட்டை என்பது தடிமனாக இருக்கும் என்றால் சான்று பொருள் கட்டையாகும். சான்றுபொருள் கம்யாகவும் எடுத்துகொள்ளலாம். கட்டையாகவும் எடுத்துக்கொள்ளளலாம். மேற்படி சான்றுபொருள் கட்டையை யார் யார் வைத்து இருந்தார்கள் என்று சொல்லமுடியாது. கரண்ட் இல்லை. அ.சா.1 எனது தம்பி உறவு ஆகும். புகார்தாரர் வயிரவன் எனது பங்காளி ஆவார். எதிரிகள் அந்த இடத்தில் இல்லை என்றாலும் , எதிரிகளுக்கும் சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் அ.சா.1 க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.